<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No.162/2013**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 13.11.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : மணிமேகலை Father's Name : லட்சுமணன்

துவக்க நேரம்:12.41 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>**4-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

1. இவ்வழக்கின் 1-ஆம் பிரதிவாதி எனது மாமனார் என்றாலும், 2-ஆம் பிரதிவாதி மாமியார் என்றாலும் சரிதான். 3-ஆம் பிரதிவாதி எனது கணவரின் சகோதரர் என்றாலும், 4-ஆம் பிரதிவாதி 3-ஆம் பிரதிவாதியின் மகன் என்றாலும் சரிதான். இவ்வழக்கை நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது கணவர் முருகனுக்கு சேரவேண்டிய சொத்து அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசு என்ற முறையில் எனக்கு கொடுக்கப்பட்டது.

2. கடந்த 25.01.2004-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை எனது கணவர் இறந்த பின்னிட்டுதான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். எனது கணவரின் வாரிசு என்ற

அடிப்படையில்தான் மேற்படி ஆவணத்தின்படி எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 ஆண், 1 பெண் குழந்தைகள், ஆனால் இருவரும் தற்பொழுது உயிருடன் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் (வ.சா.ஆ-1) எனது மாமியாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அவரது சம்மதத்தின் பெயரில் அவர் தனக்கு பாகம் வேண்டாமென கூறியதால்தான் அவருக்கு பாகம் ஒதுக்கவில்லை. அவ்வாறு எனது மாமியாருக்கு பாகம் வேண்டாமென கூறிய விவரம் பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தில் 2-ஆம் பிரதிவாதியான எனது மாமியாருக்கும் பாகம் உண்டு என்றாலும், அவர் தனக்கு பாகம் தேவையில்லை என்று எப்பொழுதும் கூறவில்லை என்றாலும் சரியல்ல. 2-ஆம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விவரம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அவர் தனக்கு பாகம் வேண்டாமென கூறியதன் பெயரில்தான் தாவா சொத்து எனது பெயரில் எழுதி வைக்கப்பட்டது.

4. 2-ஆம் பிரதிவாதி தனது பதிலுரையில் தாவா சொத்தில் தனக்கு பாகம் உண்டு என கூறியுள்ளார் என்றாலும், அவரை இந்த வழக்கிலிருந்து நீக்கம் செய்துள்ளது தவறானது என்றாலும் சரியல்ல, எனக்கு 3, 4 பிரதிவாதிகளால்தான் பிரச்சனை கொடுக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக இவ்வழக்கை நடத்தி வருகிறேன். நான் சொல்வது தவறு என்றாலும், நான்தான் 3, 4 பிரதிவாதிகளிடம் வீண் பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

5. தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு எந்த

உரிமையும் இல்லை என்றாலும், இவ்வழக்கை பாகம் கோரி தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றாலும் சரியல்ல. அவ்வாறு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்படாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை ரத்து செய்தது தவறு என்றால் சரியல்ல, அவர்கள்தான் அவ்வாறு ரத்து செய்ய சொன்னார்கள். 1, 2 பிரதிவாதிகள் வழக்கை ரத்து செய்ய கூறவில்லை என்றாலும், தற்பொழுது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மேற்கண்ட குறுக்கு விசாரணை 3 ஆம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பு மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 12.57 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.162/2013 , Dt.13.11.2025